Handloom Cess

* 228-J *Q.*—SRI N. K. PALANISAMI AND SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the amount of Handloom Cess Fund received from the Centre for the year 1958–59 ; and

(*b*) how it is distributed?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

SRI N K. PALANISAMI : செஸ் பண்டிலிருந்து நமக்கு ரூ. 92 லட்சம் கிடைத்தும், அதில் ரிபேட்டுக்காக ரூ. 45 லட்சம் ஒதுக்கப் பட்டிருந்தும் 5 மாத காலமாக பல பிரைமரி சொஸைடிகளுக்கு ரிபேட் வரவில்லை என்று சர்க்காருக்கு புகார் வந்திருக்கிறதா ? அப்படியானால், இது விஷயமாக சர்க்கார் உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுப்பார் களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ரிபேட் கிடைப்பதற்கு சில காலமாக கொஞ்சம் காலதாமதமாகிக் கொண்டிருப்பது உண்மை. காரணம் என்னவென்றால், ரிபேட் ஒரு அணாவிலிருந்து இரண்டு அணாவாக உயர்த்தப்பட்டவுடன் அதற்கு புதியதாக கணக்குகள் போட்டு "சாங் ஷன்கள்" வாங்க வேண்டியிருக்கிறது. அதனால் சற்று தாமதமாகிறது என்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் இந்த நிலைமை மாறிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : இப்பொழுது கைத்தறித் துணிகள் அதிகமாக தேங்கிக்கிடக்கின்றன. கைத்தறித் துணிக்கு மீண்டும் ரிபேட் கொடுப்பதற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்து ஏதேனும் உத்தரவு வந்திருக்கிறதா ? அதற்காக நம் அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்பொழுது கைத்தறித் துணிகள் தேங்கியிருக்கின்றன என்று சொல்லுவது சரியல்ல. இப் பொழுது தேக்கம் எல்லாம் நீங்கி கைத்தறித் துணி நல்ல முறையிலே செலவாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் மீண்டும் ரிபேட் எந்த முறையில் நீடிக்க வேண்டுமென்பது பற்றி சில ஆலோசனைகளை சென்னை அரசாங்கம் கொடுத்திருக்கிறது. முக்கியமாக எப்பொழுதும் $1\frac{1}{2}$ அணா, 2 அணா ரிபேட் இருந்தால் வாங்குபவர்களுக்கு அதிக ஊக்கம் இருப்பதில்லை. ஆகவே, தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை காலங்களில் ஏதாவது ரிபேட் அதிகமாக உயர்த்திக் கொடுத்தால் தேக்கம் நீங்கிவிடும் என்று நினைத்து, அம்மாதிரி செய்யலாம் என்ற யோசனையை நாங்கள் சொல்லி யிருக்கிறோம்.

Maternity benefit

* 228-K *Q.*—SRI N. MURUDACHALAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any maximum time-limit is fixed for the grant of benefit to women workers; and

---

[a] Printed as Appendix V on page 876 Infra.